

# 2. மன்னிப்பின் பாதை

## முன்னுரை

பிப்ரவரி மாதத்தில் அடியெடுத்து வைத்துள்ளோம் நாம். பதினோராம் தேதி லூர்து அன்னையின் திருவிழாவைத் தாயாம் திரு அவை சிறப்பிக்கின்ற அதே வேளையில், உலகனைத்தும் அதனை நோயுற்றோர் மற்றும் நலம் நாடுவோரின் தினமாக அனுசரிக்கிறது. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என உணர்ந்துள்ள அனைவரும் பிணியற்ற ஒரு வாழ்வையே எதிர்நோக்கி வாழ்கின்றோம். ஆனால், அதற்கு அடிப்படையாய்த் தேவைப்படுகிற அமைதியான உள்ளம் தான் நம்மில் பலருக்கு இல்லாமல் போகிறது. வன்மம், வைராக்கியம், கோபம், எரிச்சல், பகைமை, பழிவாங்கும் எண்ணம், மன்னிக்க மறுத்தல், மனதிருக்கம் ஆகியவையே பல நோய்களுக்குக் காரணமாக அமைகிறது என்பது, மருத்துவ ஆராய்ச்சியாளர்களின் கற்றறிருந்த முடிவாய் விளங்குகிறது. நேசிக்கும் மனமிருந்தால் நோயெல்லாம் பறந்தோடும்; மன்னிக்கும் மனமிருந்தால் மருந்துக்கே தேவை ஏற்படாது என்பது அனுபவம் உணர்த்தும் பாடம். திருச்சிலுவைப் பாதை என்பது மாபரன் இயேசு மானிடர்க்காய் மேற்கொண்ட மன்னிப்பின் பாதை. அந்தப் பாதையைப் பின்பற்ற முனையும் நாம் மன்னிக்கக் கற்றுக்கொள்வோம் வாருங்கள். மன்னிப்பின் வள்ளலாம் இயேசுவே நம்மை வழிநடத்துவார்.

### ✦ முதல் நிலை

"தீமைக்குத் தீமை செய்வேன் என்று சொல்லாதே; ஆண்டவரையே நம்பியிரு; அவர் உன்னைக் காப்பார்."

(நீ.மொ. 20:22)

## பழி சுமத்துவோரை பரிவோடு பார்க்கப் பழகுவோம்

என் துயரத்துக்கெல்லாம் காரணமான அந்த நபரை மன்னிப்பதா? சாத்தியமேயில்லை. அநியாயமாய் பழிசுமத்தி

எனக்கு வரவேண்டிய வேலை வாய்ப்பினை, பதவி உயர்வினை, நல்ல வரனை தடுத்து நிறுத்திய அந்த உறவினரை மன்னிப்பதா? இயலாத காரியம். எனது வாழ்க்கைக்கான ஆதாரமே அவர் கையில் இருந்தபோது கைகழுவிச்சென்ற அந்த உயர் அதிகாரியை மன்னிப்பதா? - முடியவே முடியாது. என் சார்பாய் நின்றிருக்க வேண்டிய அந்த நபர் எதிர்முகாமில் சேர்ந்து கொண்டு எனக்கெதிராகக் கொக்கரித்ததை என்னால் எப்படி மறக்க முடியும்? இவர்கள் அத்தனை பேரையும் பழிவாங்கியே தீருவேன் எனப் பொருமிக் கொண்டிருக்கும் என் அன்பு மகனே! மகளே! ஒரு நிமிடம் நில். சற்று நிதானி. என்னைக் கொஞ்சம் பார்.

சிலுவைப் பாதையின் முதல் தலத்தில் எனக்குள்ளும் எழுந்திருக்க வேண்டிய எதார்த்தமான எண்ணங்கள்தான் இவை. அநியாயமாய்ப் பழிசுமத்திய பரிசேயரை, கை கழுவிய பிலாத்தை, எனக்கெதிராய் கொக்கரித்த அந்தக் கூட்டத்தை நான் நினைத்திருந்தால் பார்வையாலேயே பொசுக்கியிருக்க முடியும். ஆனால், அதை நான் செய்ய விரும்பவில்லை. காரணம் பகைமைக்கும், வன்மத்துக்கும், அநீதிக்கும் யாராவது ஒருவர் முற்றுப்புள்ளி வைத்தால்தான் மானுடம் மீண்டு எழ முடியும். நான் மன்னித்தேன். இன்று உலகமே என்னை மண்டியிட்டு ஆராதிக்கிறது. ஆத்திரப்படவும், கோபப்படவும் பழிவாங்கவும் நியாயமான காரணங்கள் அனைத்தும் உன் பக்கம் இருந்தாலும் ஒருமுறை மன்னித்துப் பார். தாங்கமுடியாத சுமையும், அநீதமான தண்டனையும் உன்னை வாட்டுவது போல் இருக்கும். ஆனால் கடைசியில் நீதான் வெற்றி வீரனாய் நிமிர்ந்து நிற்பாய். ஒரு தலைமுறையே உனக்குத் தலை வணங்கும். பரம்பரை பரம்பரையாக வளர்த்தெடுக்கப்பட்ட பகைமையை பொறுமையால் வென்ற மாமனிதன் என உன்னைப்புகழும்.

## செபம்

எனக்கெதிராக குற்றம் செய்வோரை வெறுக்கிறபோது நான் சராசரி மனிதன்; அவர்களைத் தாக்கி அதில் சந்தோஷம்

காண்கிறபோது நான் மிருகம்; அவர்களை மன்னித்து மதிக்கிற போதுதான் நான் உம்முடைய சாயல் என்பதை உணரச்செய்யும் இயேசுவே.

◆

## ✦ இரண்டாம் நிலை

“மற்றவர்களைக் கண்டனம் செய்யாதீர்கள்; அப்போதுதான் நீங்களும் கண்டனத்துக்கு ஆளாக மாட்டீர்கள்.” (லூக். 6:37)

# மூத்தோரின் தவற்றை முதிர்ச்சியோடு மறப்போம்

“பாவம் ஒரு பக்கம் பழி ஒரு பக்கம்” என்பது எந்தவிதத்தில் நியாயம்? யாரோ செய்த குற்றத்துக்கு நான் ஏன் தண்டனை அனுபவிக்க வேண்டும்? தன் உல்லாச வாழ்க்கைக்காக கடன் வாங்கி, கடன் வாங்கி குடும்பத்தைச் சீரழித்ததோடு தாங்க முடியா பெரும் கடன் சுமையை என்மீது சுமத்திவிட்டுப் போன என் தந்தையை என்னால் மன்னிக்கவே முடியாது. இரண்டு பேரின் அடங்காத ஆசையினால், கட்டுக்கடங்கா காமத்தால் அவர்கள் ஆடிய களியாட்டத்திற்கு விலையாய்ப் பிறந்துவிட்ட என்னை “அப்பன் பெயர் தெரியாதவள்! அவள் பெற்ற பிள்ளை தானே இவள்! இப்படித்தான் இருப்பாள்” என இந்தச் சமுதாயம் பரிகசிப்பதற்குக் காரணமான என் பெற்றோரை என்னால் ஒருபோதும் மன்னிக்க முடியாது என மூர்க்கத்தனமாய்க் கோபப்படும் என் மகனே! மகளே!

உன் கோபத்தில் உள்ள நியாயம் எனக்குப் புரிகிறது. நீ அனுபவிக்கிற வலியும் எனக்குப் புரிகிறது. ஆனால், இந்தக் கசப்பான உண்மைகளை உன் உள்ளம் சுமந்து கொண்டேயிருந்தால், அவை ஏற்படுத்தும் ரணங்களை நீ பெரிதாக்கிக் கொண்டே இருந்தால், உன் வலிதானே அதிகரிக்கும்! அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களோ? இல்லையோ? அதை ஆண்டவன் பார்த்துக் கொள்ளட்டும். ‘என்மீது சுமத்தப்பட்ட

சிலுவை அநியாயமானது; நான் செய்யாத குற்றத்துக்காகத் தண்டிக்கப்படுகிறேன்' என்பது எனக்குத் தெள்ளத் தெளிவாய்த் தெரிந்தபோதும் அந்தச் சிலுவையை நான் அணைத்துக் கொண்டேன். சிலுவை சுகமானது என்பதாலோ, நியாயமானது என்பதாலோ அல்ல. அந்தச் சிலுவையை நான் சுமப்பதன் மூலம் ஒரு சாபத்தின் கதையை மீட்பின் சரிதையாய் மாற்ற முடியும் என்பதால். என்னோடு சேர்ந்து சாபத்தையும் வரமாக மாற்றும் சூட்சமத்தைக் கற்றுக்கொள். அவமானத்தின் சின்னமான சிலுவையை மீட்பின் அடையாளமாய் மாற்றிய என்னோடு சேர்ந்து மன்னிக்கப் பழகு. மூத்தோரின் பிழையால் பொலிவிழந்திருக்கும் உன் வாழ்க்கை மின்னும் ஒளிச்சுடராய் பிரகாசமடையும்.

**செபம்**

என் இழிநிலைக்குக் காரணமானவர்களை நினைத்து நினைத்து வெகுண்டெழும்போதும், வெஞ்சினம் கொண்டு அவர்களைப் பழிவாங்கத் துடிக்கும்போதும் வெந்து போவது நான்தான் என்பதை உணர்ந்து, மூத்தோரின் தவற்றைக்கூட முதிர்ச்சியோடு மறக்கும் அருள்தாரும் இயேசுவே!

◆

## ✦ மூன்றாம் நிலை

"அன்பார்ந்தவர்களே! பழிவாங்காதீர்கள்; அதைக் கடவுளின் சினத்திற்கு விட்டுவிடுங்கள்." (உரோ. 12:19)

# வரலாற்றுப் பிழைகளை நெஞ்சுரத்துடன் சந்திப்போம்

"இந்தப் பகுதியில், இந்த இனத்தில், இந்தக் குடும்பத்தில் குழந்தையாய்ப் பிறந்தது என் தவறா? என் சாதியின் பெயரைச் சொல்லி, என் பிறப்பின் குலக்கோத்திரம் பேசி என்னை இழிவு படுத்துவோரை எப்படி மன்னிப்பது? அறிவும், ஆற்றலும்,

ஆசையும், ஆர்வமும், முயற்சியும், முன்னெடுப்பும் உள்ள என்னைப் பார்த்து “உனக்கெல்லாம் எதுக்கு இந்த ஆசை? யார் யாரு எங்க இருக்கணுமோ, அங்கதான் இருக்கணும், புரியுதா?” என்று சொல்கிறவர்கள் மீது கோபம் வராமல் வேறு என்ன வரும்? பழிவாங்க வேண்டும் என்கிற எண்ணம் தானே இயற்கையாய்த் தோன்றும். வர்ணாசிரமம் போன்ற வரலாற்றுப் பிழைகளால் என்னையும் என் வாழ்வையும், நசுக்குகிறவர்களை நான் எப்படி மன்னிக்க முடியும் எனக் கேள்விகள் எழுப்பும் என் அன்பு மகனே! மகளே!

உன் கோபமும், வெறுப்பும், வேதனையும் வேகமும் நிச்சயமாய் நியாயமானவைதான். ஆனால் ஒன்றைப் புரிந்துகொள். நீ எழுந்துவிடக்கூடாது என்பது தான் அவர்களின் நோக்கம். கோபம் உன் கண்ணை மறைக்க நீ செய்யும் ஏதோ ஒரு செயல் தவறானதாக அமைந்து விட்டால் அதுவே அவர்களுக்கு ஆயுதமாய் மாறிவிடும். அந்த ஒன்றை வைத்துக்கொண்டே “இவர்கள் இப்படிப்பட்டவர்கள் தான்; புத்தியை காட்டி விட்டார்கள் பார்த்தீர்களா?” எனப் பழிபோட்டுப் பேசுவர். அதனை ஆமோதிக்க பெருங்கூட்டமே காத்திருக்கும். எனவே, என்னைப்போல் சற்று பொறுமையாய் இருக்கக் கற்றுக்கொள். நான் வீழ்ந்தது போல் தோன்றினாலும் என் மனமும் வைராக்கியமும் வீழவில்லை. எழுந்து நடந்தேன். இறுதியில் வென்றது நான் தான். இந்த இந்தியத் திருநாட்டின் சட்ட வடிவத்தை வார்த்துத் தந்த அண்ணலுக்கும் அன்றையச் சமூகம் இத்தகைய கொடுமைகளைச் செய்தன என்பது வரலாறு. பிறரால் தாழ்த்தப்படுகிறபோது ஏற்படுகிற அவமானத்தை பழிவாங்கும் எண்ணமாய் மாற்றுவதற்குப் பதில் உரமாய் மாற்றுகிற வித்தையை கற்றுக்கொள். விருட்சமாய் எழுவாய். அப்போது உன்னை வீழ்த்தியோரும், உன்னை வீழ்த்த முயற்சித்தோரும்கூட வியந்து நின்று வாழ்த்துவர்.

**செபம்**

என்னைப் புறந்தள்ளப் பார்ப்பவர்களை நான் வெறுப்பதைக் காட்டிலும், அவர்கள் வியக்கும் வண்ணம் உயருவதே

நான் அவர்களுக்குத் தருகிற சரியான பதிலடியாய் இருக்கும் என்று உணர்ந்து வாழச் செய்தருளும் இயேசுவே.

◆

✦ **நான்காம் நிலை**

"பகைமை சண்டைகளை எழுப்பிவிடும்; தனக்கிழைத்த தீங்கு அனைத்தையும் அன்பு மன்னித்து மறக்கும்."

(நீ.மொ. 10:12)

# நகைப்போரைக் கூட நயமாக எதிர்கொள்வோம்

"ஒன் மகனப் பத்தி ஊரேப் பேசுது! இப்படியா சந்தி சிரிக்கிற மாதிரி பிள்ளய வளப்பே?" என என் தாயை பழிப்போரை என்னால் எப்படி மன்னிக்க முடியும். என்னைப் பற்றி ஏதாவது சொன்னால் கூடத் தாங்கிக் கொள்வேன். என் தாயைப் பழித்துப் பேசுகிறவர்களை என்னால் எப்படி விட்டு வைக்க முடியும் என எத்தணிக்கும் என் அன்பு மகனே! மகளே!

ஊர்வாயை அடக்குவது அவ்வளவு சுலபம் அல்ல. ஆனால் அதே நபர்கள் வாய்பொத்தி நிற்கச் செய்வது சாத்தியம். புரணி பேசுவதையே பிழைப்பாகக் கொண்ட பலர் நம்மிடையே வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். இந்த உலகில் நான் வாழ்ந்த போது "உன் மகன் பித்துப் பிடித்தவன் போல் திரிகிறான்; அவனுக்குப் பேய் பிடித்து விட்டது" என என் தாயிடம் சிலர் கூறத்தான் செய்தனர். நான் சிலுவை சுமந்து சென்றபோது என் தாயின் காதுபட என்னவெல்லாம் சொன்னார்களோ தெரியாது. ஆனால், என் தாய் என்னை முழுமையாக நம்பினார். அவர் நம்பும்படி நானும் வாழ்ந்தேன். உன்னைப் பற்றி உன் தாயிடமும், உன் தாயைப் பற்றி உன்னிடமும் பழித்துப் பேசுபவர்களைத் துவம்சம் செய்யத் துடிக்கும் உன் பாசம் எனக்குப் புரிகிறது. ஆனால் அதைவிட

முக்கியமானது, பழித்துரைத்த அந்த வாய்களையே புகழ்பாடச் செய்வது.

என் ஆற்றலை அறிந்து கானாவூரில் முதல் அருஞ் செயல் செய்ய என்னைத் தூண்டிய என் அன்னை, தன்னையும் என்னையும் அவமானப்படுத்தியவர்களை முறியடிக்க என்னைத் தூண்டியிருக்க முடியும். ஆனால் அவர் அவர்களை மன்னித்தார். என்னையும் மன்னிக்கவே ஊக்குவித்தார். அதனால்தானோ என்னவோ அவரை எல்லாத் தலைமுறையினரும் பேறுடையாள் எனப் போற்றுகின்றனர். நீயும் மன்னிக்கக் கற்றுக்கொள். ஊர் வாயை அடக்குவதற்குப் பதிலாக உன் வாழ்வை உயர்த்தப்பார். அப்போது நகைப்போர் கூட நாணிடச் செய்யலாம்.

**செபம்**

என்னையும், என் பிறப்பையும், என் பெற்றோரையும் இழிவுபடுத்துவோரை பழிவாங்கத் துடிப்பதைவிட, அவர்கள் வாயாலேயே புகழ்பாட வைப்பதுதான் சிறந்தது என்பதை உணர்ந்து, உழைத்து உயர்ந்திடும் அருள் தாரும் இயேசுவே!

◆

## ✦ ஐந்தாம் நிலை

“யார் மேலாவது நீங்கள் மனத்தாங்கல் கொண்டிருந்தால் மன்னித்து விடுங்கள். அப்போது விண்ணகத் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிப்பார்.” (மாற். 11: 25, 26)

# கைவிடுவோரைக்கூட கடந்து செல்லப் பழகுவோம்

நான் வேலை தேடி அலைந்தபோது, ஒரே ஒரு வார்த்தை, ஒரே ஒரு அறிமுகம் செய்திருந்தால் என் வாழ்க்கை எப்படியோ மாறியிருக்கும். அதைச் செய்ய மறுத்தவர்களை மன்னிப்பதா?

என் மகளின் திருமணம் கூடிவந்தபோது கொஞ்சம் பொருளுதவி செய்திருந்தால் அவளது வாழ்க்கையை நான் செட்டில் செய்திருப்பேன். அதைச் செய்யத் தவறியவர்களை என்னால் ஒருபோதும் மன்னிக்க முடியாது. இப்படி எத்தனையோ சமயங்களில் எனக்கு உதவக்கூடியச் சூழலில் இருந்தபோதும் உதவ மறுத்த மனிதர்களையெல்லாம் மன்னிக்க நான் ஒன்றும் மகான் அல்ல என வெகுண்டெழும் என் அன்பு மகனே! மகளே!

உனக்கு ஏற்படுகிற அதே நியாயமான கோபம் தான் சிலுவை சுமந்து சென்றபோது எனக்கும் எழுந்தது. எத்தனையோ பேர் எனக்கு உதவியிருக்க முடியும். சொல்லப் போனால் அவர்கள் எனக்கு உதவியிருக்க வேண்டும். காரணம், அவர்களில் பலபேருக்கு நான் அருஞ்செயல்கள் புரிந்திருந்தேன். ஆனாலும் அவர்களில் ஒருவரும் எனக்கு உதவ முன்வரவில்லை. முன்பின் அறிமுகமில்லாத சீமோனின் உதவி தான் எனக்கு கை கொடுத்தது.

நீயும் கூட யாருடைய உதவியாலோ இப்போது, நல்ல நிலையை அடைந்திருக்கலாம். உனக்கு உதவ மறுத்த அத்தனை பேர் முன்னாலும் சென்று, உன் அந்தஸ்தைக் காட்டவும், அவர்கள் கூனிக்குறுகும் அளவுக்கு வசைபாடவும் உன்மனம் துடிக்கலாம். ஆனால், என்னைப்பார். நான் அவர்கள் அத்தனை பேரையும் மன்னித்தேன். நீயும் மன்னித்துப்பார். அன்றைக்கு ஒருவர்கூட என் சிலுவையை சுமக்க முன்வராதநிலை மாறி, இன்றைக்கு ஆலயங்களில் நடக்கும் சிலுவைப் பாதைகளில் சிலுவையைச் சுமக்கப் போட்டி நிலவுகிறது. இதுதான் காலத்தின் கோலம். நீயும் நம்பு. காலம் மாறும். உனக்கு கை கொடுக்க முன்வராத கரங்கள் எல்லாம் கைதட்டி ஆரவாரம் செய்வதோடு உன் காலைச் சுற்றி வரவும் துடிப்பார்கள். மன்னித்துப் பார்; மாண்பு பெறுவாய்!

## செபம்

எனக்கு உதவி செய்ய கடமைப்பட்டோரும், எனக்கு உதவுவார்கள் என நான் நம்பியோரும் கைவிடும் சூழல்களில் நான் அவர்களைக் கடிந்து கொள்வதைவிட, அவர்களும் கைதட்டிப் பாராட்டும் அளவுக்கு உயர்ந்திடும் அருள்தாரும் இயேசுவே!

◆

## ✦ ஆறாம் நிலை

“குற்றத்தை மன்னிப்பவர் நட்பை நாடுகிறார்; குற்றத்தைத் திரும்பத் திரும்ப நினைவூட்டுகிறவன் நட்பை முறிப்பான்.”

(நீ.மொ. 17:9)

# வருந்த மறுப்போரைக்கூட பரந்த மனதுடன் மன்னிப்போம்

என்னைக் காயப்படுத்திய எத்தனையோ பேரிடமிருந்து நான் எதிர்பார்த்ததெல்லாம் பெரிதாய் ஒன்றுமில்லை. “என்னை மன்னித்து விடுங்கள்; கோபத்தில் செய்து விட்டேன்; தவறு என்னுடையது தான்” என்று ஏதாவது சொல்லி என் காயத்தை ஆற்றுவார்கள் என்பதுதான். ஆனால் “மன்னித்துக் கொள்ளுங்கள்” எனச் சொல்வதுகூட அவசியமற்றது எனக் கருதுவோரை என்னால் எப்படி மன்னிக்க முடியும்? எனக் கேட்கும் என் மகனே! மகளே!

உன் குரலில் உள்ள வேதனை எனக்குப் புரியாமல் இல்லை. இரத்தம் கசிந்த என் முகத்தையும், வியர்வை வழிந்தோடிய என் கன்னங்களையும், குருதி படிந்து குத்துயிராய்த் துடித்த என் திருவதனத்தையும் எத்தனையோ பேர் பார்த்தாலும், அதனை வருடித் துடைக்கத் துணிந்த கரங்கள் வெரோனிக்காவின் கரங்கள் மட்டும்தான். காயப்பட்டிருந்த என் முகத்தை கண்ட பின்னும், மனம் மாறாத அந்தக் கடின உள்ளம் படைத்தோரை நான் நினைத்திருந்தால்

சின்னாபின்னமாக்கியிருக்க முடியும். ஆனால் அதை நான் செய்யவில்லை. செய்திருந்தால் எனக்கும் அவர்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் போயிருக்கும். நான் அவர்களை மன்னித்தேன். நீயும் மன்னித்துப் பார்.

நீ மனதளவில் காயப்பட்டிருக்கிறாய்; உன்னைக் காயப்படுத்தியது அவர்கள் தான் என்று தெரிந்திருந்தும் மன்னிப்புக் கேட்கக்கூட மனமில்லாதவர்களையும், தங்கள் பக்கம் தான் தவறு என ஒத்துக்கொள்ள மறுப்பவர்களையும்கூட, உன் மனதளவில் மன்னித்துவிடு. அப்போது என் திருமுகத்தை உன் மனதில் பதிப்பேன், வெரோனிக்காவுக்கு செய்தது போலவே.

**செபம்**

தாம் செய்தவை தவறு என ஒத்துக்கொள்ளக்கூட மனமில்லாதவர்களை மன்னிப்பது மடமை என எனக்குத் தோன்றினாலும், அவர்களை மன்னிப்பதால் நான் இறைவனின் சாயலாய் விளங்குகிறேன் என்பதை எனக்குக் கற்றுத் தாரும் இயேசுவே.

◆

✦ **ஏழாம் நிலை**

“உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள்; உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள்.” (லூக். 6:27)

# முத்திரை குத்துவோர் முன் மாண்புடன் எழுவோம்

அடைந்த தோல்வியிலிருந்து நான் மீண்டெழ முயன்றபோது “அதெல்லாம் முடியாது. உன்னால் உருப்படியாய் எதைத்தான் செய்ய முடியும்?” எனப் பரிகாசம் செய்தவர்களை நான் மன்னிக்க வேண்டுமா? “இது உதவாக்கரை” என முத்திரை குத்திய ஆசிரியர், “போறான் பாரு ரவுடிப்பய” என்று என்னை இழிவுபடுத்திய போலீஸ்காரர், ‘இதெல்லாம் தேறும்னு நெனைக்கிறே!” என உதாசீனப்படுத்திய பெருசுகள், “முடவன்

கொம்புத்தேனுக்கு ஆசைப்படுற மாதிரி போடுற ஆட்டத்தப் பாரு" என்று வயிறெரிந்த உறவுகள் - இப்படி எத்தனை, எத்தனையோ முத்திரைகளைக் குத்தி எனது வளர்ச்சிக்கு முற்றுப் புள்ளி வைக்க நினைப்போரை நான் ஏன் மன்னிக்க வேண்டும் எனக் குமுறும் என் மகனே! மகளே!

சிலுவைப் பாதையின்போது கீழே விழுந்த என்னைத் தூக்கி விடுவதற்குப் பதிலாக தூற்றியவர்கள்தான் அதிகம். ஏற்கனவே உடல் பலவீனமடைந்திருந்த என்னைத் தங்கள் வார்த்தை அடிகளாலும், சாட்டை அடிகளாலும் துன்புறுத்தியவர்களே அதிகம். நான் நினைத்திருந்தால் அவர்களை விழச்செய்துவிட்டு நான் வீரசாகசம் செய்திருக்க முடியும். ஆனால், நான் அதைச் செய்யாததற்குக் காரணம் உடலால் விழுந்த நான் உள்ளத்தால் விழ விரும்பவில்லை. அகழ்வாரைத் தாங்கும் நிலத்தை நான் முத்தம் செய்தபோது இகழ்வாரைத் தாங்கும் இதயம் தான் என்னில் மேலோங்கியது. நான் அவர்களை மன்னித்தேன். நீயும் அவர்களை மன்னித்துப் பார். "முடிந்தது அவன் கதை" என முத்திரை குத்துவோருக்கு சரியான பதிலடி உன் எரிச்சலைக் காட்டுவதல்ல, எழுச்சியைக் காட்டுவதுதான். உற்சாகமாய் நீ மீண்டெழும் ஒவ்வொரு முறையும் அவர்களை தோல்வியுறச் செய்தது போல் இருக்கும். எனவே மீண்டெழு; மன்னிக்கும் மனதோடு மீண்டெழு.

## செபம்

என்னைச் சிறுமைப்படுத்தி, பலவாறு அநியாய முத்திரைக் குத்தி முடக்க நினைப்போர் முன் என் கோபத்தைக் காட்டுவதற்குப் பதில், துணிவோடு எழுந்து, தளர்ச்சி யின்றி நடந்து, இலக்குகளை அடைகின்ற அருள்தாரும் இயேசுவே!

◆

## ✦ எட்டாம் நிலை

"சினமுற்றாலும் பாவம் செய்யாதிருங்கள்; பொழுது சாய்வதற்குள் உங்கள் சினம் தணியட்டும்." (எபே. 4:26)

# போலி மனிதர்களைப் பொறுத்துக் கொள்ளுவோம்

வாயொழுகப் பேசிவிட்டு வாழாதிருப்போரைப் பார்த்தால் எனக்குக் கோபம்தான் வருகிறது. “ஐயோ பாவம்! உங்களுக்கா இப்படி ஆகணும்?” என்று நீலிக் கண்ணீர் வடிக்கும் சிலரைப் பார்த்தால் எனக்கு வெறுப்பு மட்டுமே மிஞ்சுகிறது. எனக்கு முன்னால் பரிதாபப்படுபவர்கள் போல் நடித்துவிட்டு, எனக்குப் பின்னால் கைகொட்டிச் சிரிப்போரை நினைக்கையில் எனக்குள் எழும் சினத்தை என்னால் அடக்க முடியவில்லை. இவர்களை எல்லாம் மன்னிப்பது என்பது சாத்தியமே இல்லை எனச் சொல்லும் என் அன்பு மகனே! மகளே!

இந்தத் தலத்தில் எனக்கு ஏற்பட்ட உணர்வும் இதுதான். எனக்காகக் கண்ணீர் வடித்த அந்தப் பெண்களைப் பார்த்தபோது எனக்குள் ஆயிரம் கேள்விகள். இவர்களில் எத்தனை பேர் உண்மையாகவே மனம் வருந்தி அழுகிறார்கள்? உள்ளம் நொந்து அழுபவர்கள் எத்தனை பேர்? உணர்ச்சி வசப்பட்டு அழுபவர்கள் எத்தனை பேர்? எனவேதான் அவர்களைப் பார்த்து வெளிப்படையாய்ச் சொன்னேன். “எனக்காக அழவேண்டாம்; உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்” என்று. அதற்குமேல் அவர்களோடு நான் நேரம் செலவழிக்கவில்லை. என் பயணத்தைத் தொடர்ந்தேன். அவர்கள் என்னைத் தொடர்ந்தார்களா, இல்லையா என்பது எனக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை.

உன்னைப் பார்த்து அழுபவர்களில் யார் உண்மையாகவே அழுகிறார்கள்? யார் நீலிக் கண்ணீர் வடிக்கின்றனர்? என்பது உனக்குத் தெரிந்திருக்கக் கூடும். வேடதாரிகளின் பச்சாதாப மொழிகளும், போலிக் கண்ணீரும் உனக்குள் எரிச்சலை ஏற்படுத்தினாலும் நீ அவர்களை சட்டை செய்யாமல் தொடர்ந்து பயணிப்பதே சிறந்தது. அவர்களை வெட்கப்படுகிற வைக்கும் கேள்விகள் கேட்பதை விடுத்து, உன் பயணத்தில் கவனம் செலுத்து. அப்போது அவர்கள் நிசப்தமாகிப் போவார்கள்.

**செபம்**

வேடதாரிகளின் போலித்தனமான செயல்களைத் தோலுறித்துக் காட்டுவதைக் காட்டிலும், இலட்சியப் பயணத்தில் கவனம் செலுத்துவதே சிறந்தது என்பதை எனக்கு உணர்த்தும் இயேசுவே!

◆

## ✦ ஒன்பதாம் நிலை

"உங்களை சபிப்போருக்கு ஆசி கூறுங்கள்; உங்களை இகழ்ந்து பேசுவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்." (லூக். 6:28)

# பொல்லாங்கு செய்பவரைப் பொறுத்தருளப் பழகுவோம்

இடர்களில் நான் இன்னலுற்றபோது எனக்கு உதவாமல் ஒதுங்கி நின்றவர்களைக்கூட என்னால் மன்னிக்க முடியும். எனக்கு உதவ வந்தச் சிலரைக்கூட ஏதேதோ சொல்லித் தடுத்தவர்களைத்தான் என்னால் மறக்கவும் முடியவில்லை; மன்னிக்கவும் முடியவில்லை. "அவனுக்கு உதவி செய்யப்போய் நீ மாட்டிக் கொள்ளாதே!" "அவங்கிட்டே இருந்து சற்று ஒதுங்கியே இரு. ஒன் நல்லதுக்குத்தான் சொல்றோம். அதுக்கப்புறம் ஓம்பாடு." என்றெல்லாம் சொல்லி நல்ல உள்ளங்களைக்கூட மனச்சலவை செய்துவிட்ட மனிதர்களை என்னால் எப்படி மன்னிக்க முடியும்? எனக் கேட்கும் என் அன்பு மகனே! மகளே!

உன் வினாவில் இருக்கும் வேதனை எனக்குப் புரிகிறது. என் சிலுவைப் பாதையில் மூன்றாம் முறை நான் விழுந்தபோது என்னை வீழ்த்தியது உடல் சோர்வு மட்டுமல்ல, மனச்சோர்வும்தான். எனக்கு உதவிய சீமோன், என் முகத்தைத் துடைத்த வெரோனிக்கா, எனக்காக அழுதப் பெண்கள் - இவர்கள் எல்லோரும் காவலர்களிடம்

பட்டப் பாட்டைக் கண்கூடாகப் பார்த்தேன். எனக்கு உதவ வந்த அவர்களையும், அந்தக் காவலர்கள் தாக்கிய விதம் என்னை வேதனைக்குள்ளாக்கியது. நான் நினைத்திருந்தால் என் ஆற்றலைப் பயன்படுத்தி அவர்களை செயலிழக்கச் செய்திருக்க முடியும். ஆனால் எனக்குத் தெரியும்'' இது இருள் ஆட்சி புரியும் நேரம்'' என்பது. எனவே பொறுமை காத்தேன். 'பொறுத்தார் பூமி ஆள்வார்' என்பது என் வாழ்வில் மட்டுமல்ல, தேசப்பிதா மகாத்மா காந்தி, தென் ஆப்ரிக்காவின் நெல்சன் மண்டேலா என எத்தனையோ பேர் வாழ்வில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. நீயும் பொறுமையைக் கடைபிடி. பொல்லாங்கு செய்பவரையும் பொறுத்துக் கொள்ளப்பழகு.

**செபம்**

எனக்கு உதவி செய்ய மறுப்பதோடு நில்லாமல், உதவி செய்ய முன்வருவோரையும் தடுக்கின்ற மனிதர்களை சபிக்கத் துடிக்கும் என் மனதை மாற்றி, எனது பொறுமையால் பெருமை அடையும் அருளைத் தாரும் இயேசுவே.

◆

### ✦ பத்தாம் நிலை

"தீமைக்குப் பதில் தீமை செய்யாதீர்கள்; எல்லா மனிதரும் நலமெனக் கருதுபவை பற்றியே எண்ணுங்கள்."

(உரோ. 12:17)

## அவமானத்தின் போது அமைதியை அணிந்து கொள்வோம்

அந்த அவமானத்தை என்னால் மறக்க முடியுமா? எத்தனையோ அவமானங்களைப் பொறுத்துக் கொண்ட நான் பொது இடத்தில் நடந்த அந்த அவமானத்தை எப்படிப் பொறுத்துக் கொள்ள முடியும்? கல்யாண வீட்டில், குடும்ப விழாவில், பலர் பார்க்கும் வண்ணம் என்னை அவமானப்படுத்திய என்

நெருங்கிய உறவினர்களை நான் எப்படி மன்னிக்க முடியும்? எனப் பொறுமுகிற என் அன்பு மகனே! மகளே!

உன் இதயத்தின் ரணம் எனக்குப் புரியாமல் இல்லை. அவமானப்படுத்திய அவர்களை அசிங்கப்படுத்த வேண்டும் என்கிற உன் துடிப்பு எனக்குப் புரிகிறது. ஆனால் ஒரு நிமிடம் நீ என்னைப் பார். இந்தத் தலத்தில் எனக்கு ஏற்பட்ட அவமானத்தை உன்னால் கற்பனைக்கூட செய்து பார்க்க முடியாது. அனைத்தையும் படைத்த என்னை, அகிலத்தையே அழகால் உடுத்திய என்னை நிர்வாணமாக்கி எள்ளி நகையாடுகிறார்கள். நான் நினைத்திருந்தால் அவர்கள் அனைவரையும் நிர்மூலமாக்கி நிர்க்கதி ஆக்கியிருக்க முடியும். ஆனால் அதை நான் செய்யவில்லை. செய்திருந்தால் அவர்களைப் போல் நானும் அற்பக்குணம் படைத்தவனாகி இருப்பேன்.

மற்றவர்கள் முன் நான் எப்படி தோற்றமளிக்கிறேன் என்பதைவிட என் மனச்சான்றுக்கு முன்னும், என் தந்தையின் கண்களுக்கும் நான் எப்படி இருக்கிறேன் என்பதுதான் முக்கியம் என்றுணர்ந்து அமைதி காத்தேன். நீயும் அமைதி காக்கக் கற்றுக்கொள். உன்னை அவமானப்படுத்துவோர் மீது அதீதக் கோபம் கொள்ளாதே. ஒன்றை மட்டும் தெளிவாகப் புரிந்து கொள். என்னைக் கைவிடாத என் தந்தை உன்னையும் கைவிட மாட்டார். மகிமையின் ஆடையால் உன்னை நிச்சயம் உடுத்துவார்.

## செபம்

பொதுவிடங்களிலும், மற்றவர் பார்வையிலும் என்னை அவமானப்படுத்துவோர் மீது எழுகின்ற என் நியாயமான கோபத்தை அடக்கிக் கொண்டு, அமைதியின் ஆடையால் என்னை உடுத்திக் கொள்ளும்போது கடவுளின் பார்வையில் நான் அழகானவன் என்பதை உணரச் செய்திடும் இயேசுவே!

◆

✦ பதினொன்றாம் நிலை

"மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார்." (மத். 6: 14)

# கட்டுப்படுத்த முனைவோரைக் கனிவோடு பார்ப்போம்

எந்தப் பக்கம் போனாலும் எனக்குத் தடை போடுகிற நபர்களை என்னால் எப்படி மன்னிக்க முடியும்? எங்கே நான் உயர்ந்துவிடுவேனோ? என்கிற பொறாமையில் எனக்குக் கிடைக்கக்கூடிய ஒவ்வொரு வாய்ப்பையும் அடைக்கிற மனிதர்களை எப்படி நான் மன்னிப்பது? நான் பெறுகிற ஒவ்வொரு அறிமுகத்தையும் அவதூறுகளால் அறுத்தெறிந்து, என்னை நகரவிடாமல், வாழ்வின் முன்னேற்றப் பாதையில் ஒரு அடியைக்கூட எடுத்து வைக்க முடியாமல் என்னை கட்டிப்போட்டு, கட்டுப்படுத்த நினைக்கும் மனிதர்களை என்னால் ஒருபோதும் மன்னிக்கவே முடியாது என விம்முகிற என் மகனே! மகளே!

உன் வேதனையின் தாக்கம் எனக்குப் புரிகிறது. சிலுவைப் பாதையின் இந்தத் தலத்தில், அதைவிடக் கொடிய வேதனையைத் தான் நான் அனுபவித்தேன். கூரிய ஆணிகளால் என் கைகளையும், கால்களையும் அவர்கள் துளைத்தபோது ஏற்பட்ட வலி ஒருபுறம் இருந்தாலும், எதற்காக என்னை இப்படி முடக்கப் பார்க்கிறார்கள் என்கிற வேதனைதான் அதிகமாய் இருந்தது. சென்ற இடமெல்லாம் நன்மை செய்வதையே வாழ்வாகக் கொண்டிருந்த என்னை இப்படி முடக்கிப் போடுவதால், கழுமரத்தில் கட்டி வைப்பதால், சிலுவையில் அறைந்து வைப்பதால் அவர்களுக்கு என்ன நன்மை ஏற்படப் போகிறது என்று எனக்குப் புரியவில்லை. நான் நினைத்திருந்தால் திமிறி எழுந்து அவர்களைத் தலைதெறிக்க ஓடச் செய்திருக்க முடியும். அரை நொடியில் அவர்களைச்

செயலிழக்கச் செய்திருக்க முடியும். ஆனால் அதை நான் செய்யவில்லை. காரணம், அவர்கள் என்னை அறைந்த சிலுவையை சிம்மாசனமாக மாற்ற என் தந்தையால் முடியும் என்பது எனக்குத் தெரியும். எனவே மன்னித்தேன். நீயும் மன்னிக்கப் பழகு. சிலுவைகள் சிம்மாசனமாய் மாறுவதை நிச்சயம் நீ உணர்வாய்.

**செபம்**

கட்டுண்டவராய் சிலுவையில் கிடந்தாலும் கடின மனம் இல்லாதவராய், வலிகளைக்கூட வல்லமையாய் மாற்ற முடிந்த உம்மைப் பின்பற்றி, என்னையும் என் வளர்ச்சியையும் கட்டுப்படுத்த முனைவோரைக் கனிவுடன் மன்னித்து, என் கடமையைத் தொடர எனக்குக் கற்றுத்தாரும் இயேசுவே!

◆

## ✦ பன்னிரண்டாம் நிலை

"ஒருவருக்கொருவர் நன்மை செய்து பரிவு காட்டுங்கள்; கடவுள் உங்களைக் கிறிஸ்து வழியாக மன்னித்தது போல நீங்களும் ஒருவரை ஒருவர் மன்னியுங்கள்." (எபே. 4:32)

# ஈவிரக்கம் இல்லாதோரையும் இரக்கத்தோடு பார்ப்போம்

குறைந்தபட்ச மனிதாபிமானம் கூட இல்லாமல் என்னைத் தவிக்க வைத்த அந்தச் சொந்தத்தை மன்னிப்பதெல்லாம் இயலாத ஒன்று. சாகக் கிடந்த என் தாயை, தந்தையை, உடன்பிறப்பை, பெற்றெடுத்த பிள்ளையைக் காப்பாற்ற உதவுங்கள் என நான் கதறியபோது கண்டு கொள்ளாத அந்தக் கல்நெஞ்சக்காரர்களை ஒருக்காலும் மன்னிக்க முடியாது. வாழ்வா, சாவா என விபத்தில் சிக்கிய நான் பரிதவித்தபோது பாராமுகமாய் இருந்த சிலரையும் பரிகாசம் செய்த சிலரையும் நினைத்தாலே கோபம் கொப்பளிக்கிறது எனப் புலம்பும் என் அன்பு மகனே! மகளே!

இந்த அவஸ்தை என்ன என்பது எனக்கு நன்றாகவே தெரியும். சிலுவையில் நான் உயிர்விடும் முன் பட்ட வேதனையையெல்லாம் சொல்லி மாளாது. ‘தாகமாயிருக்கிறேன்’ என்று கதறிய எனக்கு தண்ணீர் தர மறுத்த அவர்கள் கசந்த காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள். உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்த எனக்கு முன்பாக, என் ஆடையை எடுத்துக் கொள்ள உல்லாசமாய் சீட்டுப்போட்டுப் பார்த்தார்கள். சிலுவை அடியில் இருந்து கொண்டு என்னைப் பரிகாசம் செய்தவர்களையும், பழித்துரைத்தவர்களையும், என் சாவுக்காகக் காத்திருந்த கயவர்களையும் நான் நினைத்திருந்தால் சபித்திருக்கலாம். அவர்களை உருக்குலைத்து உயிருக்கு அஞ்சி ஓடச் செய்திருக்கலாம். ஆனால் செய்யவில்லை. “தந்தையே! இவர்களை மன்னியும்” என்று தான் மன்றாடினேன். அந்த மன்னிப்பின் உச்சத்தைத் தான் இன்றளவும் இந்த உலகம் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஈவிரக்கம் இல்லாதவர்களை மன்னிப்பதற்கு மனித இயல்பு இடம் தராது. என்னைப் போல இறை இயல்பை அணிந்து கொண்டு அவர்களை இரக்கத்தோடு மன்னித்து விடு. அப்போது நீயும் கடவுளின் பிள்ளை என உயர்ந்து நிற்பாய்.

## செபம்

“உயிர் காப்பான் தோழன்” என்கிற முதுரைகளையெல்லாம் பொய்யாக்கிவிட்டு, என்னைக் கைநெகிழ்ந்த நண்பர்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் எப்போது அழிவு வரும் எனக் காத்திருக்கும் கல்நெஞ்சை என்னிடமிருந்து அகற்றி, கனிவான இதயத்தை எனக்குத் தந்தருளும் இயேசுவே!

◆

## ✦ பதின்மூன்றாம் நிலை

“தீமை உங்களை வெல்லவிடாதீர்கள்;
நன்மையால் தீமையை வெல்லுங்கள்.”

(உரோ. 12:21)

# நன்றி மறந்தோர்க்கும் நல்லவராய் இருப்போம்

"நல்லா இருந்த காலத்தில் எல்லாம் கூடிக்கும்மாளம் போட்டுவிட்டு, எனக்குத் தேவை என்று வந்தபோது தலைதெறிக்க ஓடியவர்களை என்னால் எப்படி மன்னிக்க முடியும்? பாலூட்டி வளர்த்த பிள்ளையும், ஓய்வின்றி உழைத்துக் காத்த மகனும் மகளும், பெற்றெடுத்த எங்களுக்கு நன்றி சொல்வதற்குப் பதிலாக, வீட்டின் மூலையிலோ, அல்லது முதியோர் இல்லங்களிலோ தவிக்கவிட்டுச் செல்லும்போது ஏற்படும் வேதனையையும் மீறி மன்னிக்கச் சிரமமாய் உள்ளது. "உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு" என வள்ளுவப் பெருந்தகையே கூறியுள்ளார். நன்றி மறந்த நயவஞ்சகர்களை மன்னிப்பதே பெரும்பாவம் என உருமுகிற என் அன்பு மகனே! மகளே!

உன் குரல் எனக்குக் கேட்காமல் இல்லை. இந்த பதின்மூன்றாம் நிலையில் என் தாய் சொல்லொண்ணாத் துயரத்தை அனுபவித்தபோது, இதைவிடக் கொடுமையான நிலையில்தான் இருந்தார். எனது அன்னையைத் துறந்துவிட்டு, எந்தச் சீடர்களோடும், திருத்தூதர்களோடும் மூன்று ஆண்டுகள் சுற்றித் திரிந்தேனோ, அவர்களில் ஒருவரைத் தவிர வேறு யாரையும் காணவில்லையே என என் அன்னை பரிதவித்தார். என் தாயின் வேண்டுதலால் நான் நிகழ்த்திய முதல் புதுமைத் தொடங்கி அன்றுவரை நான் நிகழ்த்திய அனைத்து அற்புதங்களாலும் பலன் பெற்றவர்களின் நினைவுகள் எல்லாம் அவர் மனதில் அலைமோதியிருக்கும். அவர்களில் ஒருவர்கூட இக்கட்டான இச்சூழலில் என்னுடன் இல்லையே என்கின்ற கவலையும், கோபமும் நிச்சயமாய் என் அன்னைக்கு இருந்திருக்கும். ஆனாலும் அவர்களில் ஒருவரைக்கூட என் தாய் மறந்தும் சபிக்கவில்லை. நன்றி மறந்த அவர்களைக் கோழைகள் என இனம் கண்டுகொண்ட என் தாய், அவர்களை மன்னித்ததோடு நில்லாமல், என்

விண்ணேற்றத்திற்குப்பின் அவர்களை ஒன்றுதிரட்டி ஜெபித்து உற்சாகமூட்டினார் என்பதுதான் வரலாறு. எனவேதான் "மிகவும் இரக்கமுள்ள தாய்", "கிருபை தயாளம் நிறைந்தவர்" என்று இன்றளவும் போற்றப்படுகிறார். இதுதான் இரக்கத்தின் மாண்பு. நீயும் முயற்சித்துப் பார்; நன்றி மறந்தவர்கள்கூட நாணும்படி மன்னிக்கப் பழகு.

**செபம்**

கழுமரத்தில் உம்மையும், கையறுநிலையில் உம் அன்னையையும் பரிதவிக்க விட்டுவிட்டு பயந்தோடிய சீடர்களைக்கூட நீரும், உம் அன்னையும் மன்னித்தது போல நாங்களும் பழிவாங்கும் எண்ணத்தைத் துறந்து பரிவோடு பார்க்கும் மனதினை எங்களுக்குத் தாரும் இயேசுவே!

◆

## ✦ பதினான்காம் நிலை

"ஒருவரை ஒருவர் பொறுத்துக்கொள்ளுங்கள். ஒருவரைப் பற்றி ஒருவருக்கு ஏதாவது முறையீடு இருந்தால் மன்னியுங்கள்."

(கொலோ. 3:13)

# பங்காளிச் சண்டையின் பேதமையை உணர்வோம்

பரம்பரைச் சொத்தில் எனக்குச் சேர வேண்டிய பங்கை அநியாயமாக அபகரித்துக்கொண்ட என் பங்காளியை மன்னிக்க நான் என்ன பைத்தியக்காரனா? கொஞ்சம் கொஞ் சமாய் வரப்பினை நீட்டி, வஞ்சகமாய் என் சொத்தில் சேதாரம் உண்டாக்கியவனோடு ஏற்பட்டத் தகராறு, அதனை எதிர்த்துத் தொடர்ந்த வழக்கு, வாய்தா, அதனால் ஏற்பட்ட பொருள் நஷ்டம் - இவற்றையெல்லாம் மறக்க முடியுமா? அனைத்தையும் இழந்து நிற்கும் நான் அவர்களை மன்னிப்பதா? ஒருக்காலும்

முடியாது. தானாடாவிட்டாலும் தன் தசையாடும் என்பார்கள். எனக்கோ என் உடன் பிறந்தவர்களை நினைத்தாலே இரத்தம் கொதிக்கிறது என்று குமுறும் என் அன்பு மகனே! மகளே!

உனக்குள் இருக்கும் வலியும், "நம்பிக் கெட்டோமே" என்கின்ற நியாயமான கோபமும் எனக்கு நன்றாகவேப் புரிகிறது. ஒன்றே ஒன்றை மட்டும் உனக்குச் சொல்ல விரும்புகிறேன். உலகில் வாழ்ந்தபோது முகவரியே இல்லாதவர்களில் ஒருவன் நான். பிறப்பதற்கோ, இருப்பதற்கோ, இறந்தபின் அடக்கப்படுவதற்கோ சொந்தமாய் இடம் இல்லாதிருந்தேன். ஆனால் இன்றைக்கு எனக்காய் எத்தனைக் கோயில்கள்! பேராலயங்கள்? உடைமைகளைக் கொண்டுதான் ஒருவரின் வாழ்க்கை அந்தஸ்து அறியப்படுகிறது என்பது இந்த உலகத்தின் தவறானப் புரிதல். இந்த உலகில் உயர்ந்து நிற்கும் சிலைகளையும், நிதம் பலர் சென்று மரியாதை செய்யும் நினைவிடங்களையும் நீ கணக்கெடுத்தால், அவற்றுள் பலபேர், சொத்துக்களே இல்லாதவர்கள்; அல்லது அந்தச் சொத்துக்களைத் துறந்தவர்கள் தான். மனிதர்களாக வாழ்ந்த அவர்களை மனிதகுல மாணிக்கங்களாக உயர்த்தியது அவர்களிடம் இருந்த மன்னிக்கும் பண்பு; பகைவர்களையும் சகமனிதர்களாய் மதித்து வாழ்ந்த மாண்பு. நீ வெறும் மனிதனா? மனிதகுல மாணிக்கமா? யாரையும் பங்காளியாய்ப் பார்த்து பகைமை பாராட்டாதே. உடன்பிறப்பாய்க் கருதி உறவுகொள்.

## செபம்

எனக்குரியது, உனக்குரியது என வரிந்து கட்டிக்கொண்டு சண்டையிடும் நாங்கள் கடைசியில் எடுத்துச்செல்வது ஒன்றுமில்லை என்பதை உணர்ந்து, வாழுகிற வரையில் அனைவருடனும் நல்லுறவு கொண்டு வாழ்கின்ற அருளினைத் தாரும் இயேசுவே.

◆

## முடிவுரை

"எத்தனை முறை மன்னிப்பது?" என்ற பேதுருவின் கேள்விக்கு "எழுபது முறை ஏழுமுறை" எனப் பதில் பகர்ந்த இயேசு, தமது கல்வாரிப் பாதையில் அதனைச் செய்து காட்டியுள்ளார். அவரோடு நடைபயின்ற நமக்கு மன்னிப்பது சிரமம் என்றாலும், இயலாத காரியம் இல்லை என்பது புரிந்திருக்கும். வாழ்வின் பல்வேறு நிலைகளில், பல்வேறு நபர்களால், பல்வேறு விதங்களில் காயப்பட்டுள்ள நமக்கு, சிலுவையில் மரித்த இயேசு ஓர் உண்மையைப் புரிய வைக்கிறார். பழிவாங்கிய மனிதர்களில் பலபேர் பதுங்கு குழிகளிலும், போர் முகாம்களிலும்தான் தங்கள் வாழ்வை முடித்துக் கொண்டார்கள். ஆனால், மன்னிப்பதில் வள்ளலாய்த் திகழ்ந்த இயேசுதான் மீட்பராக உயிர்த்தெழுந்து இன்றுவரை ஆட்சி செய்கின்றார்.

மன்னிக்கிறபோது, நாம் மற்றவர்களுக்குச் செய்கிற நன்மையைவிட நமக்குச் செய்யும் நன்மை அதிகம். மன்னிக்கிற ஒவ்வொரு முறையும் நம் மனம் தூய்மை அடைவது போலவே நம் உடலும் நலம் பெறுகிறது. பகைமைப் பாறையை உருட்டி விடுவோம். இறுகிய இதயத்தை திறந்து விடுவோம். பழிவாங்கும் எண்ணத்தைச் சுருட்டி வைப்போம். சுயநலக்குகையிலிருந்து, உயிர்த்த இயேசுவோடு உன்னத மனிதர்களாய் மீண்டு வருவோம். 'அமைதி' என்பதே நமக்கு ஆசீராய் அமையட்டும்.

◆